செ.வெ.எண்: 495/2017 நாள்: 6.10.17

## அதிக விலைக்கு உரம் விற்றதால் நடவடிக்கை

### அதிகாரி எச்சரிக்கை

காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும் தேவைக்கு ஏற்ப போதுமான அளவு யூரியா 2850 மெட்ரிக் டன்களும், டி.ஏ.பி.1641 டன்களும், மியூரியேட் ஆப் பொட்டாஷ் 2049 மெட்ரிக் டன் மற்றும் காம்ப்ளக்ஸ் 2880 டன்களும் இருப்பு உள்ளது. தேவைக்கு ஏற்ப உரம் இருப்பதால் யாராவது அதிக விலைக்கு விற்றால் விவசாயிகள் புகார் செய்யலாம் என வேளாண்மைத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் சம்பா பருவ நெல் சாகுபடி காலம் துவங்கி உள்ளது. அதனால் சம்பா சாகுபடிகளில் விவசாயிகள் தீவரம் காட்டி வருகின்றனர். இந்த சாகுபடிக்கு தேவையான உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் தனியார் விற்பனை நிலையங்களிலும் போதிய அளவு உள்ளன. விவசாயிகள் உரம் வாங்கச் செல்லும் போது தங்கள் ஆதார் எண்ணை கொடுத்து உரம் வாங்க வேண்டும். மேலும், வாங்கிய உரத்திற்கு பில் வாங்க வேண்டும். அதிக விலைக்கு உரங்களை விற்பனை செய்தால் அது தொடர்பான புகார்களை விவசாயிகள் விவசாயத்துறை அலுவலகத்தில் புகார் செய்யலாம். மேலும், அதிக விலைக்கு விற்பனை செய்யும் கடையின் உரிமம் ரத்து செய்யப்பட்டு உர விற்பனை நிலைய உரிமையாளர் மீது சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் கூடுதலாக உரங்கள் தேவைப்பட்டாலும் உடனே வழங்க டான்பெட் தயாராக உள்ளது என வேளாண்மைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

புகார் தெரிவிக்க வேண்டிய தொலைபேசி எண்கள். 9443104780
044-27222977

வேளாண்மை இணை இயக்குநர், 6/10/17
காஞ்சிபுரம்.